

வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி காந்திநகர் தந்தை பெரியார் சிலை அருகில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறுசுவை உணவை மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், பகுதி செயலாளர் என்.பரமசிவம், வட்ட செயலாளர்கள் சி.அரிகிருஷ்ணன், எம்.எஸ்.கெஜராஜ், ஜெ.சி.பி.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூரில் ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாநகராட்சி கவுன்சிலர், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஜி.எஸ்.டி. சரத் தலைமை தாங்கி 1000க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஊக்கத் தொகை வழங்கினார். கழகத்தினர் பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ம.சேசுராசு தலைமையில் – ஈரோடு இறைவனின் ‘தாய்ப் பயணம்’ நூல் வெளியீடு!

# மும்பையில் - உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா-கழகக் கொடியேற்றம்!

### இலெமுரியா அறக்கட்டளை சு. குமணராசன் சிறப்புரை – ஜேம்ஸ் தேவதாசன் பங்கேற்பு!

மும்பை, நவ.29-

மும்பை தி.மு.க. சார்பில் 30.11.2025 ஞாயிறு மாலை 6 மணி அளவில் மும்பை தாராவி கலைஞர் மாளிகையில் திமுக இளைஞரணி செயலாளர், தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில்,மும்பை இலெமுரியா அறக்கட்டளையின் நிறுவுநர் சு.குமணராசன் அவர்கள் கழகக்கொடியேற்றி, பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் கவிஞர் ‘ஈரோடு இறைவன்’ எழுதிய “தாய்ப்பயணம்”, தி.மு.க. இளைஞரணி வரலாறு பாகம் 1 மற்றும் 2 ஆகிய நூல்கள் இந்நிகழ்வில் வெளியிடப்படுகிறது.

பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்க செயலாளரும்,தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினருமான ஜேம்ஸ் தேவதாசன் அவர்கள் ‘தாய்ப்பயணம்’ நூலின் முதல்பாகம் வெளியிட

மும்பை திமுக மகளிர் அணியைச் சார்ந்த திருமதி சுகுணா அன்பழகன் பெற்றுக் கொள்கிறார்.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ அவர்கள் “தாய்ப்பயணம்” நூலின் இரண்டாவது பாகம் வெளியிட மும்பை மகிழ்ச்சி மகளிர் பேரவை அமைப்பைச் சார்ந்த திருமதி வளர்மதி கணேசன் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, மும்பை திமுக பொறுப்புக் குழு உறுப்பினர் க.மு. மாணிக்கம், மும்பை பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கழகத்தின் மூத்த உறுப்பினர் விழுப்புரம் அரசூர் இரா.மதியழகன் ‘பிறந்த நாள் கேக்’ வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்குகிறார்.

இவ்விழாவில் மலபார் குன்று பகுதி செயலாளர் சேரை ச.பிரகாஸ், கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் ஜாகிர் உசேன், மும்பை காங்கிரஸ் கட்சி செயலாளர் கோபாலகிருஷ்ணன், ரவி குணசீலன், திருவள்ளுவர் நற்பணி மன்ற தலைவர் ந.இராதா கிருஷ்ணன்,மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி,தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கத் தலைவர் எஸ்.பி.ஆனந்த், இதயம் அறக்கட்டளை தலைவர் மகேந்திரன் அண்ணாமலை, கொலாபா தமிழ்ச் சங்கத் தலைவர் வ.பன்னீர்செல்வம்,பொன் சுப்பிரமணியன், மும்பை மகிழ்ச்சி மகளிர் பேரவை நிர்வாகிகள் திருமதி வனிதா இளங்கோவன், திருமதி சுமதி மதியழகன், திருமதி வெண்ணிலா சுரேஷ், மும்பை திராவிடர் கழக துணைத் தலைவர் இ.அந்தோணி, துணைச் செயலாளர் அ.கண்ணன், உலகநாதன்,சி.பாண்டியன், அழகுராஜா, குப்பன், மகாவிஸ்ணு,

ஒர்லி பகுதி திமுக செயலாளர்கள் இரா.காந்தி, கொலாபா அப்துல் திவான் மைதீன், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், ஜவேரிபஜார் வே.இரவிச்சந்திரன், கோலிவாடா பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி, கே.கே.செல்வராஜ் தாராவி பகுதி திமுக மூத்த முன்னோடி என்.வி. சண்முகராசன், தே.ஸ்டீபன், மா.ராசன், கோவிந்தன், முனீஸ்வரன், காளிதாஸ், சேர்மன்துரை, எஸ். செல்வராஜ், வக்கோலா அன்பில் ரஞ்சன், காளியப்பன்,கொலாபா ரமேஸ், தாடி கருப்பையா,மகாராஜ், கழக அலுவலக காப்பாளர் க.ராசன், மற்றும் தோழமை கட்சி நண்பர்கள்,பொதுநல சேவகர்கள், சமூக ஆர்வலர்கள் போன்ற ஏராளமானோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

பொறுப்புக்குழு உறுப்பினர் ம.நீதிதுரை நன்றியுரை யாற்றுகிறார்.

விழா நிறைவில் அனைவருக்கும் அசைவ உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் அன்பு மற்றும் ஆனந்தம் முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.துரைமுருகன் தலைமையில் உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் யு.எஸ். வைத்தியநாதன் முன்னிலையில் தலைவர் கணேசன், துணைத் தலைவர்பாஸ்கர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணகுமார், பிரேம்,சபரி,ரமேஷ், விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி பாம்பன் மீனவர் காலணி பகுதியை சேர்ந்த பாஸ்கரன் என்கிற மீனவர் கடலில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து உயிரிழந்த செய்தி அறிந்து மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தார்க்கு ஆறுதல் தெரிவித்து நிதியுதவி வழங்கி அரசின் சார்பாக நிவாரணம் வழங்கி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து!

### எர்ணாவூர் நாராயணன் அறிக்கை!

சென்னை, நவ. 29-

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -



திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளராகவும், திருவல்லிக்கேணி சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தி.மு.க. இளைஞரணி ஏறத்தாழ 40 ஆண்டுகள் வளர்த்தெடுத்து வலுப்படுத்தி கட்டி காத்த தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் பொறுப்பினை இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்ற வள்ளுவர் சொல்லுக்கு ஏற்ப துணை முதல்வர் அப்பொறுப்பினை வழங்கி இன்று தமிழக முழுவதும் சிறப்பாக பணியாற்றி வருகிறார் .திராவிட முன்னேற்றக் கழகத்தின் திறன் மிகுந்த இளைஞர்களை ஒருங்கிணைந்து திறம்பட கடந்த நாடாளுமன்ற , சட்டமன்ற தேர்தல்களில் சிறப்பாக பணியாற்றி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வெற்றி பெற பெரிதும் உறுதுணையாக இருந்தவர். விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். சமீபத்தில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி இந்தியாவில் விளையாட்டுப் போட்டியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ காரணமாக விளங்கி வருகிறார். குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக போராட்டம், நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம், ஹிந்தி திணிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என தேய்வின்றி தனது பணியை செய்து வருபவர். துணை முதல்வர் அவர்கள் இன்னும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு பல நூறாண்டு வாழ சமத்துவ மக்கள் கழகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## செஞ்சி ஒன்றியத்தில்

# 60 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்புகள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, நவ 29-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 60 ஊராட்சிகளில் மத்திய சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்புகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலு வலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் நட ராஜன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு செஞ்சி ஊராட்சி ஒன்றி யத்தில் உள்ள 60 ஊராட்சி களில் மத்திய சத்துணவு மையங்களுக்கு எரிவாய் அடுப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாசங்கர்,நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை,குமார்,அலுவலக உதவியாளர்கள் எழிலரசி, சரஸ்வதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்பார்குணன் நன்றி கூறினார்.

## நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்

# கே.பன்னீர்செல்வம் மறைவு!

### கழகத்தினர் நேரில் அஞ்சலி!

நாகை, நவ.29-

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் ஆலமழை நடுத்தெருவைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினரும், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பி.சரண்யா கணவரும், நாகை மாவட்ட கழக இளை ஞரணி துணை அமைப்பாளருமான கே.பன்னீர்செல்வம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கே. பன்னீர் செல்வத்திற்கு மனைவி பி.சரண்யா, மகன்கள் கே.பி அகிலன், கே.பி .அமுதன், மகள் கே.பி.ஆத்வித்கா ஆகியோர் உள்ளனர். ஆலமழை நடுத்தெருவில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டிருந்த கே. பன்னீர்செல்வம் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எம்.எஸ். மணி
### நவம்பர் 29 (1980)



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின்பால் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

திருச்சி மாவட்டத்தில் தி.மு.கழகம் தழைத்தோங்க தொடக்க காலந்தொட்டுப் பெரும் பணியாற்றியவர்.

திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் இவர். தொழிற்சங்க இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசாக் கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. அன்பழகன்
### நவம்பர் 29 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவுச் சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**